ஜூன் 5, 2015

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தாய், நாடகத்தின் ஆரம்பம், மத்திமம் மற்றும் இறுதி அல்லது முக்கிய நடிகர்கள் போன்றவற்றை அறியாத ஒரு நடிகரை பற்றி உன்னால் என்ன சொல்ல முடியும்? நீங்கள் அனைவரிலும் மிகபெரிய நடிகரின் வாழ்க்கை வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும். அனைவருக்கும் சத்கதி அளிப்பவர் ஒரே ஒரு பரம்பித்தா பரமாத்மா ஆவார். அவரே பரம குருவும் ஆவார். அவர் குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானத்தையும் கொடுக்கின்றார். அவர் உங்களுக்கு கற்பிக்கின்றார். அவருடைய பாகம் அற்புதமானதாகும்.

இனிமையான பாபா, நீங்கள் இந்த பெரும் காவிய படத்திற்கு முக்கிய நடிகராக இருக்கின்றீர்கள். நீங்கள் நன்மைபயப்பவர் மற்றும் நான் ஒரு ஜூனியர் நன்மைபயப்பவராக இருக்கின்றேன். நீங்கள் உலகில் உள்ள பல பில்லியன் ஆத்மாக்களுக்கு சத்கதி அளிக்கும் ஒரே ஒரு பரம்பித்தா பரமாத்மா ஆவீர்கள் என்ற விழிப்புணர்வை பராமரிக்கின்றேன். முழு உலகமும் உங்கள் தன்னலமற்ற வழிகாட்டல் மற்றும் போதனைகளின் ஆதாரத்தில் இருக்கின்றது. உங்கள் பாகம் அற்புதம் மற்றும் என்னுடைய பாகமும் அற்புதம்.

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு: நீங்கள் பாராட்டு மற்றும் அவதூறு, மரியாதை மற்றும் அவமரியாதை, மகிழ்ச்சி மற்றும் துக்கம் அனைத்தையும் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

நான் சகிப்புத்தன்மை என்னும் மனோபாவத்தை ஏற்றுக்கொள்வதில் உறுதியாக இருக்கின்றேன். இனிமையான பாபா, நான் என்னை உங்கள் நினைவினால் நிரப்பிக்கொள்கின்றேன். அதனால், பாராட்டு மற்றும் அவதூறு, மரியாதை மற்றும் அவமரியாதை, மகிழ்ச்சி மற்றும் துக்கம் அனைத்தையும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியும். நான் சகிப்புத்தன்மை என்னும் மனோபாவத்தை பராமரிப்பதால் என் மனம் ஏற்ற இறக்கம் இல்லாமல் இருக்கின்றது. நான் எனக்கு நடக்கும் அனைத்தும் என்னை வலிமையாக்குகின்றது என்பதை உணர்கின்றேன். நான் எதையும் யாரையும் குற்றம் சுமத்தவில்லை. மேலும் சமநிலை பேணும் மனோபாவத்தை வைத்திருக்கின்றேன்.

## திருஷ்டி அல்லது தூய பார்வை

பாபா ஆத்மாவிற்கு: அவர் பெரிய அறுவை சிகிச்சை நிபுணர் ஆவார். அவர் உங்களுக்கு ஞான ஊசியை கொடுக்கிறார். அது ஞான தைலம் என்றும் அழைக்கப்படுகின்றது. அது ஞான காஜல் (கண் மேக்அப்) என்று கூட அழைக்கப்படுகின்றது.

இன்று, நான் ஞான காஜல் (கண் மேக்அப்) அணிய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றேன். இது என்னுடைய திருஷ்டியை அழகாக்குகின்றது. பாபாவுடன், நான் என்னுடைய மூன்றாவது கண்னை ஞான காஜலினால் வரைவதனால், என்னுடைய திருஷ்டி ஆன்மீக அழகையும் தெய்வீகத்தன்மையையும் பெறுகின்றது. இது உலகையும் மற்ற அனைத்து ஆத்மாக்களையும் நான் புரிந்துக்கொள்ளும் முறையை மாற்றி மேம்படுத்துகின்றது.

## ஓர் அலையை உருவாக்குதல்

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.